ஜனவிநோதினி.

இல. 3. மார்ச்சுமீ 1870. புஸ்த. I.

மின்தாது—இடிமின்னல்—கொள்ளிவாய்ப் பிசாசு.



ஒரு கண்ணுடிக் குழாயையாவது அல்லது முத்திரை அரக்குத் துண்டையாவது, ஈரமற்ற பிளானல் அல்லது கம்பளித் துணியைக் கொண்டு கொஞ்சநேரம் விரைவாய்த் தேய்த்தபின்பு, அக்குழாயை அல்லது அரக்குத் துண்டை இலேசான இறகு, கடுதாசித்

துண்டு, வைக்கோல் துரும்பு முதலிய கனங்குறைந்த பொருள்களுக்குச் சமீபமாய்க் கொண்டுபோனால், குழாய் அல்லது அரக்குத் துண்டானது அவற்றைத் தன்னிடத்தில் விரைவாய் இழுத்துக்கொள்ளும். மேலே சொல்லியபிரகாரம் கண்ணாடிக் குழாயை அல்லது அரக்குத் துண்டை பிளானலைக்கொண்டு இருட்டறைக்குள் தேய்த்தால் நீலவர்ணமுள்ள ஒளி தோன்றும். இவ்விதமாய்த் தேய்க்கப்பட்ட குழாய் அல்லது அரக்குத் துண்டுக்குச் சமீபத்தில் பித்தளை முதலிய உலோகங்களாகிய துப்புரவான ஒரு சிறு பதார்த்தத்தையாவது, மடக்கின விரலின் நுனியையாவது கொண்டுபோனால், கண்ணாடி அல்லது அரக்கிலிருந்து பிரகாசமுள்ள ஒரு பொறியும் வெடிக்கிற ஓசையும் புறப்படும். மடக்கின விரலின் தோல் குழாய்க்கு மிகவும் சமீபமானால், சடுதியில் குறிசொன்ற ஓர்வகை உணர்ச்சி அல்லது நோவுண்டாகும்.

இப்படிப்போலவே அநேகவகைப் பொருள்களை ஒன்றோடொன்று தேய்க்கையில் மேலே சொல்லியவற்றுக்கொப்பான விநோத தோற்றங்களுண்டாகும். இத்தோற்றங்கள் உண்டாவதற்குக் காரணம் பொருள்களுக்குள் வியாபித்திருக்கிற (Electricity) மின்தாது என்று சொல்லப்படும் ஓர் வஸ்துதான். மின்தாதுவானது உலகத்திலுள்ள சமஸ்த பொருள்களுக்குள்ளும் சிலவற்றில் கொஞ்சமாயும், சிலவற்றில் அதிகமாயும் வியாபித்திருக்கிறது. பொருள்கள் ஒன்றோடொன்று உரசுகிறபொழுது அல்லது பொருள்களுக்குள் சிலவிதமான மாறுதல்களுண்டாகும்பொழுது, மின்தாது வெளியே புறப்பட்டுத் தன் குணங்களைக் காட்டும். மின்தாதுவானது உஷ்ணத்தையும் ஒளியையும்போலொத்த ஓர் வஸ்து. ஒரு மேகத்திலிருந்து மற்றொரு மேகத்திற்காவது அல்லது பூமிக்காவது மின்தாது புறப்படுகையில் மின்னல் தோன்றும். மின்தாதுவினால்தான் தந்திகளின் வழியாய் சமாசாரங்கள் அனுப்பப்படுகின்றன. மின்தாதுக்குள் (Positive Fluid) நேர்தாபம், (Negative Fluid) மறைதாபம் என்ற இரண்டு தாதுக்கள் அடங்கியிருக்கின்றன. இவ்விரண்டும் ஒன்றையொன்று இழுத்துக்கொள்ளத்தக்க பாசமுடையவை; ஆனால் அவற்றில் ஒவ்வொன்றும் தன்னைத்தான் வெறுத்துத்தள்ளுகிற தன்மையுடையது. எப்படியென்றால்: நேர்தாபத்தைமாத்திரம் அல்லது மறைதாபத்திலும் அதிக அளவான நேர்தாபத்தையுடைய இரண்டு வஸ்துக்களை

ருக்குமானால், அவை ஒன்றைவிட்டு ஒன்று தூரமாய் விலகும். அப்படியே மறைதாபத்தைமாத்திரம் அல்லது அதிக அளவான மறைதாபத்தையுடைய இரண்டு பொருள்கள் ஒன்றையொன்று வெறுத்துத் தள்ளும். ஆனால் ஒரு வஸ்துவில் அதிகமான நேர்தாபமும், மற்றொன்றில் அதிகமான மறைதாபமுமிருக்குமானால் அவை ஒன்றையொன்று இழுக்கும். அப்போது ஒன்றிலுள்ள தாபம் மற்றொன்றுக்குட் பாய்ந்து பரவி அவ்விரு வஸ்துக்களுக்குள்ளும் தாபங்களிரண்டும் சமமாகக் கலந்து நிற்கும். ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவோடு உரசும்பொழுது, அவற்றிலுள்ள மின்தாதுவில் முழுமையாவது அல்லது ஓர் பாகமாவது நேர்தாபம் மறைதாபமாகப் பிரிந்து, உரசப்பட்ட வஸ்துக்களில் ஒன்றில் அதிகமான நேர்தாபமும், மற்றொன்றில் அதிகமான மறைதாபமுமாகப் போய்ச் சேர்ந்திருக்கும். பின்பு இவ்விரண்டு வஸ்துக்களும் தாபங்கள் சமமாய்க் கலந்துபோகும்வரையில் ஒன்றையொன்று இழுக்கும்; அல்லது அவ்விரண்டு வஸ்துக்களிலிருந்து வித்தியாசமான தாபங்களை வேறு இரண்டு வஸ்துக்கள் முறையே பெற்றுக்கொள்ளுமானால், இந்த இரண்டு வஸ்துக்களும் ஒன்றையொன்று இழுக்கும்.

முன் சொன்னபிரகாரம் சகல வஸ்துக்களுக்குள்ளும் மின்தாதுவானது பல வேற்றுமையான அளவாய் வியாபித்திருக்கிறது. ஏதுகாரணத்தினாலாவது ஒரு வஸ்துவில் இயல்பாயிருக்கவேண்டிய அளவிற்கு மேற்பட மின்தாது சேருமானால், அளவிற்கு மிஞ்சின மின்தாதுவானது அவ்வஸ்துவிலிருந்து வேறொரு வஸ்துவுக்குட் பாய்ந்து பரவப்பார்க்கும். இப்படி மின்தாதுவானது ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு வஸ்துவுக்குட் செல்லுகிறதில் அது செல்லும் விதம் பலவகையாயிருக்கும். சில வஸ்துக்களுக்குள் மின்தாது செல்லுகிறது அல்லது பரவுகிறது மிகவும் வருத்தம். சில வஸ்துக்களுக்குள் அது தாமதமாயும், சொல்ப அளவாயும செல்லும். வேறு சில வஸ்துக்களுக்குள்ளோ மின்தாதுவானது உடனே அதிவிரைவாய்ச் சென்று ஊடுருவிப்போம்.

அரக்கு, கெந்தகம், கண்ணாடி, ரதனகற்கள், பட்டு, மயிர், இறகு, பதனிடப்பட்ட தோல், ஆகாயம, பலவித எண்ணைகள், சுண்ணாம்பு முதலியவைகளுக்குள் மின்தாது செல்லுகிறது அல்லது பரவுகிறது மிகவும வருத்தம.

வெள்ளி, தாம்பிரம், ஈயம், பொன், இரும்பு முதலிய உலோகங்கள், அடுப்புக்கரி, தண்ணீர், உப்புத்தண்ணீர், எண்ணை நீங்க

லாக மற்ற நீர்போன்ற வஸ்துக்கள், புல் பூண்டு விருட்சங்களி லும் ஜீவஜெந்துக்களிலுமுள்ள பலவித பதார்த்தங்கள் ஆகிய இவைமுதலிய வஸ்துக்களை மின்தாதுவானது அதிக லகுவாயும் விரைவாயும் ஊடுருவிப்போம்.

முன் சொன்னபிரகாரம் மின்தாது பொருள்களில் இயல்பாயி ருக்கவேண்டிய அளவில் ஏற்றக்குறைச்சல் நேரிடும்பொழுது, அது அதிக அளவையுடைய பொருளிலிருந்து குறைவுள்ள பொ ருளுக்குட் பிரவேசிக்கப்பார்க்குமாகையால், அவ்விரண்டு பொ ருள்களுக்கும் இடையில் வேறொரு பொருளுமில்லாமல் அவை ஒன்றோடொன்று ஒட்டியிருந்தாலும், அல்லது அவற்றின் மத்தியில் மின்தாது லகுவாய் ஊடுருவிப்போகத்தக்க உலோகங்கள் முத லிய பொருள்களிருந்தாலும், மின்தாதுவானது ஓசை ஒளி காங்கை முதலிய வெளிததோற்றங்களன்னில் செல்லும். இப்படிக்கில் லாமல் அவ்விரண்டு பொருள்களுக்கும் மத்தியில் மின்தாது ஊடு ருவிப்போகத்தகாத கண்ணுடி முதலிய பொருள்களிருக்குமா னல், மின்தாது அப்பொருள்களின் வழியாய்ச் செல்ல ஏதுவில் லாமல் முன்னிருந்த இடத்திலேயே நிற்கும்; அல்லது அவற் றை விட்டு விலகி, தான் லகுவாய் ஊடுருவிப்போகத்தக்க வேறு பொருள்களின் வழியாய்ச் செல்லும். இப்படியும் செல்லுவதற்கு இடமில்லாதிருக்கையில் மின்தாதுவின் அளவு மிதமிஞ்சினதா யிருந்தால, அது தான் பிரவேசிப்பதறகுத் தடைசெய்கிற பொ ருள்களை ஒரு க்ஷணப்போதில் சின்னபின்னமாய் உடைத்துத் தகர்த்துவிட்டுப் பின்பு தான் லகுவாய் ஊடுருவிப் பாவத்தக்க பொருள்களுக்குள் அமைதலாய்ப் பிரவேசிக்கும். ஆகாயம் மத்தி யிலிருக்குமானல் மின்தாது ஓசையுடன அதைக் கிழித்துக்கொ ண்டு செல்லும்; அபபொழுது ஒளியும் உஷ்டணமும் தோன்றும்.

(இன்னும் வரும்.)

பூகோளயாத்திரை.

(தொடர்ச்சி.)

கப்பலாட்களெல்லாம் மெத்த அலுத்துப்போயிருந்தபடியால் அவ்விடத்தில் சிலநாள் தறுகிநின்று இளைப்பாறி, அப்புறம் பிர யாணப்படவேண்டுமென்று மாஜிலனுக்கு விருப்பமிருநதது; ஆயி

னும் அவ்விடத்து ஜனங்களுடைய துஷ்டகிர்த்தியங்கள் அதற்கு இடையூறாயிருந்தன. இவர்கள் அங்கே போய் இறங்கின உடனே அந்தக் காட்டு ஜனங்கள் தொகுதி தொகுதியாகக் கப்பலின் மேற்றட்டில் வந்து மொய்த்தார்கள். கப்பலாளர் இதென்ன என்று பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, அந்த மூடஜனங்கள் கப்பலில் தங்கள் கைக்கு அகப்படக்கூடியது எதெதென்ன உண்டோ அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு நடக்கத் துணிந்தார்கள்: அதுமாத்திரமல்ல, படகுகளிலும் ஒன்றைப் பிடித்துக்கொண்டார்கள். துணிகரமான இந்தச் செய்கையைக் கண்டு மாஜிலனுக்குக் கடுங்கோபமூண்டது. தக்ஷணமே தன்னுடைய வீரரில் தொண்ணூறுபேர் ஆயுதபாணிகளாகும்படி கற்பித்தது, அவன் அவர்களுடன் கரைக்குப் போய் அத்தீவின் குடிஜனங்களில் அநேகரை அதம்பண்ணி, அவர்கள் ஊரையும் தீக்கொளுத்திவிட்டு, அந்தத் தீவுகளுக்குத் திருடர் தீவுகள் என்று நிந்தையான பெயரையும் தரித்தான்.

இந்தத் தீவாருடைய நிறம் பிங்கலவர்ணம்போலுள்ளது. பொதுப்பட இவர்கள் எல்லாரும் கறுப்பு, வெள்ளை, சிவப்பு என்கிற ஏதாவது ஒரு வர்ணம் தேகம் ஆகியந்தமும் பூசிக்கொள்ளுகிறதுண்டு. இந்த ஜனங்களுடைய பாதாதிகேசபரியந்தம் தேங்காயெண்ணை ஒழுகும். பற்களில் கறுப்பு அல்லது சிவப்புக் காவி ஏற்றிக்கொள்ளுவார்கள். புருஷர்களெல்லாம் கரேரென்று கறுத்து நீண்ட தங்கள் தலைமயிரை இடுப்பளவாயும் தொங்கவிட்டு, சுத்த நிர்வாணிகளாய்த் திரிவார்கள். மிகவும் சொற்பப் பேருடைய தலைகளில்மாத்திரம் பனையோலையினால் முடைந்த ஓர்விதக் குல்லாய் போட்டிருக்கப் பார்க்கலாம், ஆனால் அவர்கள் ஸ்திரீகளுடைய காரியமோ வேறுவிதம். அவர்கள் அரைகளில் மரவுரி தரித்துக்கொள்ளுகிறதுண்டு; கருமேகம்போன்ற அவர்கள் கூந்தலானது தரைமட்டும் வந்து படியும். இந்த ஸ்திரீகள் புருஷர்களைப்பார்க்கிலும் மெத்த அழகாயிருப்பார்கள். புருஷர்கள் வெளியே போயிருக்கும்போது இவர்கள் வீட்டில் சோம்பலாயிராமல் பலவித வேலைகள் செய்துகொண்டிருப்பார்கள். இவர்களுக்கு வலை பின்னவும், பனையோலைகொண்டு பாய் முடையவும் தெரியும். ஓலைப்பாயை ஒன்றின்மேலொன்றாக மெத்தைபோல் அடுக்கி அதில் படுத்துக்கொள்வது அவர்கள் வாடிக்கை.

இந்த வனசாருக்குத் தடிகளைத் தவிர வேறு ஆயுதம் கிடையாது. அந்தத் தடிகளின் நுனியில் மிருகத்தின் கூரான கொம்புகளை வைத்து, அவற்றை வல்லயங்களைபோல உபயோகிப்பார்கள். இவர்களுடைய ஆகாரம் பறவை, மீன், அத்திப்பழம், வாழைப் பழம், தேங்காய் முதலியனவாம். அகலமான பேரிச்சம ஓலைகளைக் கொண்டுவந்து அவற்றையெல்லாம் ஒன்றுய்ச சேர்த்துத் தைத்து, அதைத்தான் படகாகச செய்துகொள்வார்கள். இந்தப் படகுக்கு முன்னணியம் பின்னணியம் என்றில்லை; இரு பக்கத்தில எபபக்கம இஷ்டமோ அதை முன்னணியமாக்கிப் பாய்விரித்தோடும்படி அந்தப் படகுகளை அமைத்திருக்கிறார்கள்.

கப்பல்கள மாார்சுமீ 10வ லேதரோன் என்னும் தீவைவிட்டுப் புறப்பட்டு, மறுநாள் யூமுன் என்னும் ஓர் தீவில் வந்து சேர்ந்தன. அவ்விடத்தில் இறங்கி நாலனையும சுற்றிப்பார்க்குமபோது, அது மனுஷநாற்றமே கிடையாத வனாந்தரமென்று தெரியவந்தது. ஆயினும் அங்கே நேர்த்தியான சுத்த ஜலமும், நல்ல கனிதரும் விருக்ஷங்களும் இருந்தன. அவவிடததில் அவர்களுக்குக் கொஞ்சம் சுவர்னமும வெண்பவளமும் அகப்பட்டன. ஸ்பானியர் அவ்விடத்தில் சிறிதுநாள் தங்கியிருக்கையில், அடுத்த ஜல்வான் என்னும் தீவிலுள்ள ஜனங்கள் இவர்களிடததில் வந்து கண்டுபேசி இவர்களோடு மெத்தப் பழக்கமானார்கள். அவர்கள் தென்னங் கள்ளும் மீனும கொண்டுவந்து இவர்களுக்கு இனுமாகக் கொடுத்ததுமன்றி, தளகர்த்தனுகிய மாஜிலனையும் தங்கள் நாவாய்க்கு அழைத்துப்போய் அங்குள்ள விநோதங்களைக், காண்பித்தார்கள். மாஜிலனும அவர்களுக்குப் பிரதிஉபசாரம் செய்யும்படி அவர்களைத் தன் கபபலுக்கு வருத்தி, அவர்கள் வருகைக்கு மரியாதையாக பெரிய பீரங்கிதீரக் கட்டளையிட்டான். பீரங்கிச சத்தம் கேட்டவுடனே அந்த ஜனங்கள் பயந்து நடுநடுங்கி ஓட்டமபிடிக்க யத்தனித்தார்கள; அப்பொழுது ஸ்பானியர் அவாகளுக்குத் தங்கள் தாற்பரியமின்னதென்று தெரிவித்து, அவர்களைக் கப்பலில் நிறுத்திக்கொளவது வெகு கஷ்டமாய் முடிந்தது.

ஜல்வான் தீவாருடைய படகுகளில் பற்பல வகையான வாசனைச் சாக்குகளும, அநேகவிதமான தங்க நகைகளும் இருந்தன: விற்பனை செய்யும்படி அவைகளைக் கொண்டுவந்திருந்தார்கள். அவர்கள் காதுகளிலும் கைகளிலும் பொன்னுற் செய்யபபட்ட கடுக்

கன்களும், தாயித்துகளும் அணிந்திருந்தார்கள். அவர்களுடைய ஈட்டி, கத்தி, வாள், சமுதாடு முதலிய ஆயுதங்கள் எல்லாம் தங்கம அழுத்தியிருந்தன. அவர்களுக்கு முக்கிய உடை மரவுரிதான், அதை அரையைச் சுற்றிக் கட்டிக்கொள்வார்கள். அவர்களில் முதன்மையானவர்கள்மாத்திரம் விசித்திரமான தையல் வேலையுள்ள பட்டு லேஞ்சி தலையிற் கட்டியிருப்பார்கள். அந்தத் தீவார் மெத்தக் கட்டையும் பருமனுமானவர்கள். அவர்களுடைய நிறம் பிங்கலம்.

ஸ்பானியர் இந்தத் தீவில் பத்துநாட்போலத் தங்கிநின்றார்கள்; அதற்குள் அவர்கள் யாத்திரையிலுண்டான சிரமங்கள் ஆயாசங்களெல்லாம வெகுதூரம் தணிந்து நல்ல சுகமடைந்ததுமன்றி, இனி வழிக்கு வேண்டிய ஆகாரம் விறகு ஜலமுதலிய சாமக்கிரியைகளும் போதுமான அளவு சம்பாதித்து வைத்துக்கொண்டார்கள்.

மார்ச்சு௴ 25௳ அவர்கள் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, தென்மேற்காகக் கப்பல்களை நடத்தி, மேற்படி௴ 28௳ வேறொரு தீவில் வந்து சேர்ந்தார்கள். அதற்கு மாஜிலன் பூத்வான்தீவு என்று பேர் கொடுத்தான். கப்பல் உத்தியோகஸ்தரில் இருவர் கரையிறங்கி அத்தீவரசனைப் போய்க் கண்டார்கள். அவர் பிரம்மாண்டமான வைக்கோற் படப்புப்போன்ற ஓர் கூரை மாளிகையில் வீற்றிருந்தார். அம்மாளிகைக்குட்போவதற்கு ஏணிவைத்து ஏறவேண்டுமேயல்லாமல் வேறுவகையில்லை. அவ்வளவு உன்னதமாகத் தூண்களை நிறுத்தி அவ்வீட்டையுயர்த்திக் கட்டியிருந்தது. அவ்வரசன் கப்பலுக்கு வந்து வாசனைத் திரவியங்களும பொன்னும் வைத்து மாஜிலனைக் கண்டான். மாஜிலன் அதற்குப் பதிலாகத் துருக்கர் மாதிரிப்படி செய்ததும், ஒன்று சிவப்பும் ஒன்று மஞ்சள் நிறமுமான இரண்டு அங்கவஸ்திரங்களை அவ்வரசனுக்குக்கொடுத்து, கூடவந்திருந்த அவன் பரிவாரங்களுக்கும கத்தி கண்ணாடி பளிங்குமணி முதலியவற்றை வெகுமதியாக அளித்தான். அந்த அரசன் பார்வைக்கு நல்ல லட்சணமானவன். அவனுடைய தலைமயிர் மிகக் கறுப்பும் மெத்த நீளமுமாயிருந்தது. அவன் காதுகளில் பொற்குண்டலங்களும், கைகளில் விரலுக்கு மூன்று பொன் மோதிரங்களும் கிடந்தன. தலையில் பட்டுக்குட்டை கட்டியிருந்தான். பொற்சரிகையும் பட்டும் கலந்த சோமன் முழங்தாள்வரையும் நான்றது. தங்கத்திலுற்செய்த கை

பிடியுள்ள ஈட்டியை மரத்தினால் சிறந்த வேலைப்பாடாகச் சமைக்கப்பட்ட உறைக்குள் போட்டு, அவன் அரையில் சொருகியிருந்தான்.

ஆயினும் அந்தத் தீவிலுள்ள புருஷர்களெல்லாம் பொதுப்பட நிருவாணிகள்தான். ஸ்திரீகளுடைய அரைகளில்மாத்திரம் கொஞ்சம் துணி சுற்றியிருக்கும்; காதில் தங்கவளையங்கள் அணிந்திருப்பார்கள். புருஷருடைய தேகமெல்லாம் சித்திரம் எழுதியிருக்கக் காணலாம். அந்த ஜனங்கள் சாப்பிடும்போது சம்மணம் போட்டு உட்கார்ந்துகொள்ளுகிறது வழக்கம். அவர்கள் கனி புசிக்கிற மாதிரி வெகு வேடிக்கையாயிருக்கும். ஏதாவது ஒரு பழத்தைக் கண்டால், அதைத் துண்டுதுண்டாய் அறுத்து ஒரு இலைக்குள் வைத்துச் சுருட்டி, அப்புறம் அதை வாயிற்போட்டுக் கொள்வார்கள். மரப்பிசின்களை எடுத்துப் பனையோலையில் பொதிந்து கட்டி, அதைத்தான மெழுகுவத்திபோல வைத்து விளக்கெரிப்பார்கள்.

அத்தீவரசனுடைய மாலுமிகள் அத்தீவைவிட்டுப் பெயர்ந்து ஜிலியன், ஜிபுத், மெஸ்ஸானு, காலிகான் என்று பேருள்ள தீவுகள் வழியாய் ஸ்பானிய கப்பல்களை நடத்தினார்கள். மெஸ்ஸானு தீவில் நாய் பூனை ஆடுமுதலிய ஜெந்துக்களும், நெல் கொளுமிச்சை பொன் மெழுகு முதலிய பதார்த்தங்களும் காணப்பட்டன.

ஏப்பிரல்மீ 7உ மெஸ்ஸானு தீவினின்றும் நங்கூரம் தூக்கி லூபததீவின் கரைபிடித்தார்கள். இது மெஸ்ஸானு தீவிலிருந்து உத்தேசம் 200 மயில் தூரமிருக்கும். இவ்விடம் வந்து சேர்ந்த உடனே ஸ்பானியர் பீரங்கி தீர்த்தார்கள். இதற்குமுன் ஒருக்காலும் இப்படிப்பட்ட சப்தம் கேட்டிராத அந்த ஜனங்களுடைய காதில் இந்தப் பீரங்கித்தொனி விழுந்தவுடனே, அவர்கள் வேர்த்து விதிர்விதிர்த்து நடுங்கிப்போனார்கள். ஸ்பானியர் மெஸ்ஸானுவைவிட்டுப் புறப்படும்போது, அத்தீவரசனும் அவர்களோடுகூடக் கப்பலில் வந்திருந்தான். அவன் இந்த லூபத்தீவரசனண்டைபோய் ஸ்பானியருடைய வருகையையும், அவர்களுடைய உத்தேசியத்தையும் குறித்து அவனுக்கு அறிவித்து, அவ்வரசன் அந்நியரிடத்தில் திறைவாங்குகிற வழக்கப்பிரகாரம் ஸ்பானியரிடத்தில் கேளாதிருக்கவும், அவர்களோடு சிநேகபாந்தமாய் உறவு கொண்டாடவும் செய்வித்தான். அதனால் லூபத்தரசனும், அவன்

மருமகனும், மெஸ்ஸாறு திவரசனும்கூட ஆக மூவரும் கப்பலுக்கு வந்து மாஜிலனைக் கண்டார்கள். அதன்பேரில் மாஜிலனும் அவ்வரசனைப் பார்க்கும்படி கரைக்குப் போனன். போய், அங்கே அரையிலே ஒரு வஸ்திரமும, தலையிலே தையல்வேலையான குல்லாவும, கழுத்திலே பொற்சரபபணிகளும், காதிலே பொற்குண்டலங்களும் தரித்து, ஈச்சம் ஓலையினுல் முடையப்பட்ட நேர்த்தியான ஒரு பாயின்மேல் வீற்றிருந்த ஹுபத்திவரசனைக் கண்டான். அவனுக்கு முன்பாக அநேக வகையான சிறுக்கலங்கள் வைத்திருநதன. அவற்றுட் சிலவற்றில் முட்டைகளும, மற்றக் கலங்களில் பேரீந்து மதுவும் நிறைந்திருநதன. விருநதினர்க்குக் களிபபாக அவ்வரசன் தன் பெண்மக்களை அவர்கள் முன்னிலையில் நிருவாணமாய் நின்று ஆடிப் பாடும்படி செய்தான்.

இத்தீவாரிடத்தில் நிறுப்பதற்கு நிறைகளும், அளப்பதற்குப் படிகளுமிருந்தன. கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் இவர்கள் எவரும் வியக்கத்தக்க நீதியும், நாணயமுமுடையவர்களென்று பிரஸ்தாபம். இவர்களுடைய வீடுகளெல்லாம் பூமிக்குமேல் இருந்த உயரத்தில் மரத்தினுல் கட்டப்பட்டிருப்பதால் அவற்றிற்குப் படிவைத்து அதன் வழியாய்த்தான் ஏறிப்போகவேண்டும்.

தளகர்த்தனுகிய மாஜிலன் ஹுபத்தாசனையும், அவன் குடிகளில் பிரதானமானவர்களையும் கிறிஸ்துமதத்திற் சேரும்படி இணக்கினுன்; அதனுல் அவர்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுர்கள். அவ்வரசனுக்கு சார்ல்ஸ் என்றும், அவன் மகனுக்கு பெர்டினுன்றெ என்றும் நாமகரணஞ் சூட்டினுர்கள். அச்சமயத்தில்தானே அவ்வரசன் மனைவியும், வேறு நாற்பது பெண்களும் ஞானஸ்நானம் பெற்றுர்கள். அவர்களில் ஒருத்தி ராஜகுமாரனுடைய மனைவி; அவள் மிகுந்த ரூபவதியும் பாலிய ஸ்திரீயுமாயிருந்தாள். அவளுடைய தலையில் ஈச்சம் ஓலையினுற் பின்னிய ஓர் விதக் கிரீடமிருந்தது. அவள் தேகமெங்கும் வெண்வஸ்திரங்கொண்டு மூடியிருந்தாள். இந்த விசேஷம முடிந்தவுடனே ஹுபத்தாசனும், அவன் பிரதானிகளும் தளகர்த்தனுகிய மாஜிலனுடைய கப்பலில் விருந்துசாப்பிட்டார்கள். இதன்பின்பு இவர்களுக்குச் சற்றுத் தாழ்ந்த அந்தஸ்திலிருந்த 500 பேர் வந்து ஞானஸ்நானம் பெற்றுர்கள். இவ்விதமாய் எட்டுநாளைக்குள் அந்தத் தீவில் ஒரே ஒரு

ஊர்தவிர, மற்ற ஊர ஜனங்களெல்லாம் கிறிஸ்துமதத்தைத் தழுவிக் கொண்டார்கள். அதன்பேரில் ஸ்பானியர் மூர்க்கவெறிகொண்டு அந்த ஊரைச் சுட்டெரித்து நிர்மூலமாக்கிப்போட்டார்கள்.

இந்தத் தீவு ஜனங்களோடு செய்த வியாபாரத்தில் ஸ்பானியருக்குக் கனலாபம கிடைத்தது. சொற்பக் கிரயமுள்ள இரும்பைக் கொடுத்து மிகுந்த பொன்னை வாங்குவார்கள். இரண்டொரு விளையாட்டுப் பண்டங்களைக்கொண்டு எத்தனையோ நாளைக்குப் போதுமான உணவுப்பொருட்களைச் சம்பாதித்துக் கொள்ளுவார்கள்.

இந்தப்பிரகாரம ஆபத்தீவில் சிலகாலம் தங்கியிருந்து, அப்புறம் மாதான் என்னும் ஓர் தீவிற்போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்து ஜனங்கள் எல்லாரும சூரியனை நமஸ்கரிக்கிறவர்கள். அவர்கள் தங்கள தெய்வத்துக்குப் பலியிடும் விதம் எப்படியெனில், வயதுசென்ற ஸ்திரீகள் இருவர் பூசாசாரிகளின் தொழிலை நடத்த ஏற்பட்டு, ஆடல் பாடல்களுடனே பலியிடும் ஸ்தானத்தில் பலிக்கு நியமிக்கப்பட்ட பன்றியின் கிட்ட வருவார்கள்; வந்தவுடனே மூங்கிற் குழாயினாற் செய்த எக்காளம் தொனிக்கப்படும்; அப்பொழுது அவர்கள் சூரியபகவானை நோக்கி பலவகையான கோரணிகளுடன் அநேக மந்திரங்களும ஜெபங்களும் செபிப்பார்கள். அப்புறம் அந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி தன் கையில் ஒரு வாளையெடுத்து அந்தப் பன்றியின் தலையை ஒரே வெட்டாக வெட்டி, அதன் வாய்க்குள் ஒரு விளக்கைக் கொளுத்தி வைப்பாள். அது அந்தப் பூஜை முடிகிறபரியந்தம் அப்படி எரிந்துகொண்டிருக்கவேண்டும். இந்தத் தீவார் இழவுகொண்டாடும் முறையும் வேடிக்கையானது. அவர்களில் யாராவது ஒரு பெரிய மனுஷன் இறந்துபோனால், அவ்வூர் ஸ்திரிகளெல்லாம வந்து வெள்ளைச்சேலை கட்டிக்கொண்டு, ஐந்துநாள் இரவும் பகலும் இடைவிடாமல் அப்பிரேதத்தைச் சுற்றி உட்கார்ந்திருந்து துக்கம் கொண்டாடுவார்கள். இறந்துபோனவனுடைய தலைமயிரைக் கத்திரித்துப்போட்டபின்பு, அவன் பெண்சாதி ஆநந்தக் களிப்பும் பாடி ஆடுகிற வழக்கமுண்டாம்.

இத்தீவிற்கு இரண்டு அரசர்கள் உண்டு. அவர்களில் ஒருவன் ஸ்பானியருக்குக் கீழமைந்து அவர்கள் அரசனுக்குக் கப்பம் கட்டமாட்டோமென்று மறுத்துவிட்டான்; ஆனாலும் அவன்-

ஸ்பானியருடன் சமாதானமாயிருக்க விரும்பி, பலவகையான உணவுப் பதார்த்தங்களை அவர்களுக்கு இனமாக அனுப்பினான். ஸ்பானிய அரசனுக்குக் கீழடங்கித் திறைகொடுக்கும் விஷயத்தைக் குறித்துமாத்திரம் அவன் கொஞ்சமும் இணங்காமல், முன் முகந்தெரியாத அரசியருக்கு நான் கப்பம் கட்டவேண்டிய காரணமென்ன? ஸ்பானியருக்கு நான் ஒரு விஷயத்திலும் கடமைப்பட்டவன் அல்லவென்று, அவன் வெகு நிதானமாயும் விவேகமாயும் சொல்லியனுப்பினான்; ஆனாலும் தளகர்த்தனாகிய மாஜிலனுக்குப் பெருமை தலைக்கொண்டுவிட்டபடியால் மகா கோபங்கொண்டு கொதித்து, அவ்வரசனை எவ்விதத்திலும் கீழ்ப்படுத்தவேண்டுமென்று நிர்ணயித்து யுத்தத்துக்கு ஆரம்பித்தான்.

(இன்னும் வரும்.)

தற்பெருமை—திமெதிரயஸ்—மீனிகிரேதெஸ்.

எதற்கும் தான்தான் முதல் என்று தனக்கு முதல் இடம் பிடிக்கப்பார்ப்பதுதான் தற்பெருமை. அது பிறருடைய தாரதம்மியம் இன்னதென்று பாராது, அவர்களுடைய பாத்தியதையும் கவனியாது; எப்பொழுதும் சிந்திப்பதும் பேசுவதும் எல்லாம் தன்னுடைய மேன்மை, தன்னுடைய புகழ், தன்னுடைய செய்கை, எல்லாம் தன்னுடையதே. பிறருடையது எவ்வளவோ சிரேஷ்டமாயும், சில சமயங்களில் தன்னுடையதிலும் சிறந்ததெனப் பட்டப்பகல்போல் பரிஷ்காரமாயும் இருந்தபோதிலும் தற்பெருமையானது பிறர் முந்திநிற்கச் சம்மதிக்கிறதேயில்லை. செய்கையிலும் பேச்சிலும் சகல விஷயங்களிலும் தான்தான் முந்திநிற்கவேண்டும்.

பெருமை, அகங்காரம், கெர்வம், மமதை, செருக்கு என்பன ஒருபொருட்சொற்கள். இவையெல்லாம் நாம் அகற்றவேண்டிய தீக்குணங்களாம். பெருந்தன்மை, மேன்மை, பிரபுத்துவம், கௌரவம் முதலியவை நாம் அடையவேண்டிய நற்குணங்களாம். பூர்வீகமாயுள்ள தமிழ்க் காவியங்களில் பெருமை என்னும் குணத்தை நாம் தழுவவேண்டிய நற்குணமாக உபசரித்திருப்பதைக் காணலாம். உ-ம். "பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின், அருமை யுடைய செயல்." "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும

தத்தம், கருமமே கட்டளைக் கல்" என வரும். ஆயினும் இப்படி வருவனவற்றுள்ளெல்லாம் பெருமை என்னும் பதத்தைப் பெருந்தன்மையென்னும் அர்த்தத்தில் பிரயோகித்திருக்கிறதேயொழிய வேறில்லையென்பதை, "பணியுமாம் என்றும் பெருமை" என்பதனால் அறிந்துகொள்ளலாம். புராதனவழக்கம் இப்படியாயினும் பிரகிருதத்தில் பெருமை என்பது அகங்காரத்துக்கும், பெருந்தன்மை என்பது கௌரவத்துக்கும் பெயராயின. பெருமை தன்னையறியாது; பெருந்தன்மை அஃதறியும். பெருமை பிறரைத் தாழ்த்தித் தன்னை உயர்த்தும்; பெருந்தன்மை பிறரை உயர்த்தித் தன்னைத் தாழ்த்தும். பெருமை நிமிர்ந்துநிற்கும்; பெருந்தன்மை பணிந்திருக்கும். இவை தம்முள் வேற்றுமை.

பெருமையென்னும் தீக்குணமானது எவருடைய மனதையும் கவர்ந்து, அதில் தனக்கு ஒரு ஸ்தானம் சம்பாதித்துக்கொள்ளும் தந்திரமுடையது. இது எப்படிப்பட்டவர்களையும் மயக்கி அவர்கள் உள்ளத்தில் நுழைந்து குடிபுகுந்து, அவர்களோடு எவ்வளவு தூரம் உறவுகொண்டாடினும், அவர்கள் ஒவ்வொருவரும் இதனுடைய ஸ்வரூபம் பிறரிடத்தில் வெளிப்படக் காணும்போது இதன்பேரில் மிகவும் அருவருப்புண்டாகி இதை வெறுத்து இகழுவார்கள். இதனால் பெருமையினுடைய ஸ்வரூபமும் தன்மையும் எவ்வளவு அசங்கியமும் கேடுமானதென்று உணர்ந்துகொள்ளலாம்.

பெருமையென்னும் பயிரானது படருகிறதற்குப் பெரும்பாலும் கல்வி செல்வம் அதிகாரம் அழகு கனமுதலிய சிலாக்கியங்கள் ஒரு கொளுகொம்புபோல உதவுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் உண்ணச் சோறும் உடுக்க வஸ்திரமும் கிடையாமல் அஷ்டதரித்திரம் பிடித்துப் பாதியாய் அழுகிய கால்கைகளையுடைய நிராப் பிணியாளரின் சிந்தையிலும் இப்புல்லுருவியானது வேரூன்றிக் கொடிவீசிப் படருகிறதைக் காண்போமானால் இதைப்பற்றி என்ன சொல்லுகிறது? ஒன்று சொல்லலாம்: பெருமையானது எப்போதும் குறைக்குடம்போன்றவர்களிடத்தினின்று கூத்தாடுமேயொழிய, நிறைகுடம்போல் நிறைந்த பெரியோரிடத்தில் அதற்கு இடங்கிடையாது. "பனையின்மேல் வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும், பச்சோலைக் கில்லை யொலி."

பெருமையானது பலவேடம் பூண்டு பலரிடத்தும் பலவிதமாய்

நடிக்கும். அது எவ்வுருக்கொளினும் இனம் தெரியாமல் தன்னை மறைத்துக்கொள்ளுதல் ஏலாது. அதன் ஸ்வரூபம் வெகு சுலபமாய்ப் பிறர்க்கு வெளிப்பட்டுபோம். வெளிப்படும்போது அது தன்னியல்பில் இருக்கையில் அடையும் கனவீனத்திலும் அதிக கனவீனத்தையும் நிந்தையையும் அடையும். ஆனால் மனுஷருடைய நிக்குணங்கள் யாவற்றிலும் பெருமையைப்போலத் தான் எண்ணிய கருமம் சித்திபெறாமல், அதற்கு எதிரிடையான பலனை அநுபவிப்பது வேறொன்றுமில்லை. பெருமையானது புகழ்ச்சியையும் கனத்தையும் நாடித் தன்னை உயர்த்துகிறது; ஆனால் இகழ்ச்சியும் நிந்தையும் அடைந்து சிறுமைப்படுகிறது. இதனைப் பின்வரும் திருஷ்டாந்தரங்களிற் காணலாம்.

மகா அலெக்சாந்தருக்குப் பின்வந்த அரசர்களில் ஒருவனாகிய (Demetrius) திமெத்திரயஸ் என்னும் நாமமுடைய மன்னன் மெத்தப் பெருமைக்காரனாயிருந்தான். வேடிக்கை வேஷம் டம்பம் ஆடம்பரம் இவைகளே மெய்யான மேன்மையென்பது போல அவனுடைய எண்ணம். சகல அரசர்களிலும் தானே பெரியவன் என்று காட்ட, தன் தலையில் இரட்டைக்கிரீடம் தரித்துக்கொண்டான். அபரிமிதமான பொருட்களைச் செலவுசெய்து அதிநூதன விசித்திராலங்கிருதமாய்ச் சமைக்கப்பட்ட ஆபரணங்களைத் தன் கால்களில் அணிந்திருந்தான். மலை கடல் நாடு வளநகர் முதலிய சிறப்புகளையுடைய பூவுலகையும், சூரிய சந்திர நட்சத்திராதி ஜோதிமண்டலங்கள் அடங்கிய வானுலகையும், தான் போர்த்துக்கொள்ளும் அங்கவஸ்திரத்தில் சுவர்ணவேலையினால் அமைக்கும்படி உத்தேசியங்கொண்டு, கைத்தொழிற் சாஸ்திரங்களிற் கற்றுத்தேறிய நிபுணர்களை வருத்தி அளவிறந்த பொருட்செலவுசெய்து அநேகவருஷம் பிரயாசப்பட்டான். பெருமையென்னும் பெரும் பைத்தியம் பிடித்த இந்த அரசனுடைய வீண் எண்ணம் சித்திபெறுவதற்கு முந்தி அவனுடைய பெருமை அழிந்தது. குறைவேலையாய்க் கிடந்த அந்த வஸ்திரம் வெகுகாலம் வரையில் அவ்வரசனுடைய வீண்பெருமைக்கும், அவனுக்குப் பின்வந்த அரசர்களின் நல்விவேகத்துக்கும் சாட்சியாயிருந்தது. எப்படியெனில், பிந்திய அரசர்களில் ஒருவராயினும் அந்த அங்கவஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவுமில்லை; அதன் குறைவேலையைத் தீர்த்துமுடிக்கக் கருதவுமில்லை.

பிரஜைகள் அவ்வரசனை முற்றிலும் வெறுத்து இகழ்வதற்கு அவனிடத்தில் வேறொரு வகையான பெருமையிருந்தது. அதென்னவெனில், எப்படிப்பட்டவர்களுக்கும் அவன் எளிதில் சமயங் கொடுக்கிறதில்லை. அவனைக் கண்டுகொள்ளவேண்டுமோனால் வருஷக்கணக்காய்க் காத்திருக்கவேண்டும். அத்தியாவசியகமான பெரிய காரியங்களினிமித்தம் அப்படிக் காத்திருந்து அவனைக் காணக்கிடைத்தாலும், அவனிடத்தில் ஒருவரும் தாராளமாய்ப் பேசப்படாது. பேசத்துணிந்தால் அவன் எவ்வளவு பெரியவனானாலும் சரி, அவமரியாதையுடன் வெளியே வருவான். இவ்வரசன் தன்னைக் கண்டு பேசவந்த அத்தேன ராஜ்ஜிய ஸ்தானாபதிகளை சமயங்கொடாமல் இரண்டுவருஷம் காக்கவைத்தான்.

மமதை பிடித்த இந்த அரசன் ஒருநாள் வெளியே சவாரிபோகும்போது அன்று ஒருநாளுமில்லாத திருநாட்போல ஏதோ ஆச்சரியமாய்ச் சற்று முகமலர்ச்சியுடன் சாந்தமாயிருந்தான். கிடைத்தற்கரிய அபூர்வமான இந்தச் சமயத்தை விட்டுவிடப்படாதென்று சொல்லி, தைரியங்கொண்ட சிலர் தங்கள் முறைபாடுகள் அடங்கிய மனுக்களை அவ்வரசனிடத்தில் துணிந்து நீட்டினார்கள். அவனும் அவற்றைப் புன்சிரிப்புடன் வாங்கி சேப்பிலே போட்டுக்கொண்டான். அப்புறம் சற்றுத் தூரத்தில் ஓர் வாராவதியைக் கடந்துபோகையில் அவன் அம்மனுக்களையெல்லாம் ஒன்றுவிடாமல் எடுத்து பிரவாகித்துச் செல்லுகிற அந்நதியில் எறிந்துவிட்டான்.

இவ்வளவு அகந்தைகொண்டு தன்னை மறந்துபோன அரசனுக்குத் தன் கோலின்கீழ் அமைந்த பிரஜைகளைப்பற்றியாவது, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப்பற்றியாவது என்னதெரியும்? பெருமை குடிகொண்ட இடத்தில் அறியாமைத்விரப் பின்னொன்றும் கூட இராது. இந்த அரசனுடைய கர்வமே இவன் அழிவுக்குக் காரணமாயிருந்தது. ஜனங்களெல்லாம் இவனுடைய பெருமையினிமித்தம் இவனை வெறுத்துக் கைவிட்டதனால் சகல பௌசும் குலைந்து சிம்மாசனமும் இழந்துபோனான். "இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுகதாம்தம், மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து."

பூர்வம் கிரேக்கை ராஜ்ஜியத்தில் (Menecretes.) மீனிகிரேதெஸ் என்று பேருள்ள வைத்தியன் ஒருவன் இருந்தான்; இவன் மகா கர்வி. இவன் வைத்தியசாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சியடைந்

திருந்தபடியால், கல்விரசெருக்கு மண்டைக்கொண்டு தன்னை மறக்கச்செய்தது. மனுஷரில் ஒருவருமதனக்கு நிகரில்லையென்றும், அதனால் தான் சாக்ஷாத் பிரகஸ்பதியேயன்றி வேறில்லையென்றும் அவனுக்குள் ஓர் அகங்காரமுண்டாயிற்று. பைத்தியமான இந்த எண்ணத்தினால் நிறைந்து, அவன் மகா ராஜாவாகிய (Philip) பிலிபபுக்கு ஒரு நிருபம் அனுப்பினான். அதில் பிரகஸ்பதியாகிய மீனிகிரேதெஸ் அரசனாகிய பிலிபபுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது என்று கண்டிருந்தது. இதை வாசித்தவுடனே அரசனுக்கு அளவற்ற ஆச்சரியமும் சிரிப்புமுண்டாயிற்று. அவன் இந்தப் பைத்தியகாரனுடைய கெர்வத்தை அடக்கி இவனுக்குப் புத்திவருத்தவேண்டுமென்று கருதி: "மீனிகிரேதேசுக்குப் புத்தியும் சுகமும் உண்டாவதாக" என்று பதிலெழுதி அனுப்பினான். பின்னும் அரசன் இவனை இவ்வளவு மரியாதையோடே விட்டுவிடப்படாதென்று சிந்தித்து, வேறொரு உபாயம்பண்ணினான். ராஜ அரண்மனையில் ஓர் பெரிய விருந்துக்கு ஆயத்தம்பண்ணி, அதற்கு மீனிகிரேதேசையும் அழைத்தனுப்பினான். அவ்விருந்தில் அரசனும், பிரபுக்களும், மந்திரி பிரதானி மற்றுமுள்ளவரும் ஓரிடத்தில் வந்திருந்தார்கள். பெருமைபிடித்த அந்த வைத்தியனுக்கு விருந்து மண்டபத்தின் ஓர் கோணத்தில் தனித்து ஒரு மேசைபோட்டு, அதன்மேல் வேறொன்றும் வையாமல் சாம்பிராணியும் கர்ப்பூரமுமாத்திரம் குவித்திருந்தன. அவ்விடத்திற்கு அவனை வெகு மரியாதையுடன் அழைத்துப்போய், ஓர் பெரிய ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணினார்கள். விருந்தினரெல்லாரும் மகா மதுரமான போசனபானங்களை மிகுந்த மகிழ்ச்சியுடனும் இன்பத்துடனும் அருந்தி, ஒருவரோடொருவர் சம்பாஷணைசெய்து களிகூருகையில், மீனிகிரேதேசுக்கு ஓர் மூலையில் தூபதீப ஆராதனை நடந்தன. அப்பொழுது அந்தப் பித்தனுக்கு அரசன் தன்னுடைய தெய்வீகத் தன்மையை ஒத்துக்கொண்டு, தனக்கு இவ்வளவு உபசாரங்கள் நடப்பிக்கிறானென்று குதுகுலமானால் சொல்லிமுடியாது, தான் ஒரு மனுஷன் என்கிற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமல் தன்னை முற்றும் மறந்து மகிழ்ச்சிகொண்டிருந்தான். ஆயினும் கொஞ்சநேரத்துக்குள் நீ தெய்வமல்ல, மனுஷனதான் என்று அறிவுறுத்துகிற பாவனையாய்ப் பசியும் தாகமும் மேலிட்டன. தான் பிரகஸ்பதி என்கிற எண்ணம் பறந்துவிட்டது. சற்றுநேரம்

வெறும்வாயை மென்றுமென்று பார்த்தான். இனி ஒரு நிமிஷமா் வ்து தன் நெய்வீகத் தன்மையைக் காத்துக்கொள்ள முடியாது, என்னசெய்வான். சடுதியாய் அரசனிடம விடைபெற்று வீட்டுக்கு நடந்துவிட்டான். "வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை, உடையம்யா மென்னுஞ் செருக்கு."

மெற்றில்டாவின் கதை.

(Matilda)

மெற்றில்டாவுக்கு இளம்பிராயத்திலேயே விவாகம் நடந்தது. அவள் புருஷன் (Naples) நேப்பில்ஸ் நாட்டிலுள்ள ஓர் உயர் குலத்தில் பிறந்த கனவான். அவளுக்குப் பதினேழாம் பிராயத்தில் சௌந்தரியமுள்ள ஒரு ஆண் குழந்தை பிறந்தது; அவ்வருஷத்திலேயே அவள் புருஷன் இறந்துபோனான். (Volturna) வால்ற்றர்ணு என்னும் நதிக்கரையின்பேரில் கட்டியிருந்த தன் மாளிகையின் மேல்மாடத்து அறைக்குள் அவள் ஒருநாட் காலையில் வழக்கப்படி போய் நதியைப்பார்க்க வைத்திருந்த பலகணியைத் திறந்து, அதற்குச் சமீபத்தில நின்று உயிருக்குயிராயிருந்த தன புத்திரனைக் கையில் ஏந்திக்கொண்டு முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடுகையில், பிள்ளை சந்தோஷத்தினால் மிகசு சிரித்துத் துள்ளி தாயின் கையைவிட்டுத தவறி, அந்நதியில் விழுந்து ஒரு சுனைத்தி... தண்ணிருக்குள் மறைந்துவிட்டது. உடனே தாயானவள் திகிலினாலும் ஏக்கத்தினாலும் நிறைந்து, மதிமயங்கினவளாய் என்னசெய்வோமென்று நினைத்து, ஆற்றில் குதித்துப் பிள்ளையைத் தேடி எடுத்துக்கொள்ளலாமென்ற நம்பிக்கைகொண்டு உடனே நதிக்குட் பாய்ந்தாள். ஆகிலும் அவள் தன் பிள்ளையைக் கண்டுபிடிக்கக் கூடாமல் போய்விட்டதும் தவிர, அவள் சொந்த உயிருக்கும் பெரியமோசம் வர இருந்தபடியால், மிகுந்த பிரயாசத்தின்பேரில் நதியினின்று நீந்தி அக்கரைபோய்ச் சேர்ந்தாள். அச்சமயத்தில் ஆற்றின் அக்கரையிலுள்ள நாட்டைக் கொள்ளையிட்டுக்கொண்டிருந்த (France) பிரான்ஸ் தேசத்துப் போர்ச்சேவகர்களில் சிலர் தற்செயலாய் ஆற்றங்கரைக்குச் சமீபத்தில் போக, அங்கே மெற்றில்டாவைக் கண்டு உடனே அவளைப் பிடித்துச் சிறையாக்கிக் கொண்டார்கள்.

அக்காலத்தில் பிரான்ஸ் தேசத்தாருக்கும், (Italy) இத்தாலி தேசத்தாருக்கும் கொடிய பகையுண்டாகி பெரிய யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இந்த யுத்தத்தில இருதிறத்தாரும் ஒருவருக் கொருவர் எள்ளளவேனும் இரக்கம் பாராட்டாமல் கொடூரசெய் கைகளை நடப்பித்துவந்தார்கள். ஆகையால் மெற்றில்டாவைச் சிறையாகப் பிடித்த போர்ச்சேவகர் குரூரச் சிந்தையினாலும் மோக இச்சையினாலும் ஏவப்பட்டு, பெரும் பாதகங்களைச் செய்ய எத்தனிக்கிற தறுவாயில், அவர்கள் ராணுவத் தலைவர்களில் ஒருவனும், தர்மகுண சீலனுமாகிய ஒரு பால்ய உத்தியோகஸ்தன் அப் போர்ச்சேவகரின் துர்ச்சிந்தையை பலமாய்க் கண்டித்து, அவர்கள் கையினின்று மெற்றில்டாவை ரக்ஷித்து, தன்னோடுகூட வாகனத்தின்பேரில் ஏற்றிக்கொண்டு பத்திரமாய்த் தன் ஜனனதேசத் திற்குப் போனான்.

அவன் முதலில் மெற்றில்டாவைக் கண்டபொழுது அவளுடைய அபூர்வ சௌந்தரியத்தைப் பார்த்து மிகவும் வியப்புற்றான்; பின்பு வரவர அவளுடைய பெருந்தன்மையையும் குணாதிசயங்களையும் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவளை மென்மேலும் அதிகமாய்ச் சிநேகித்தான். இவ்விதமாய் அவர்கள் ஒருவரையொருவர் மிக நேசித்துவர, கடைசியில் அவர்கள் சிநேகம் முற்றி இருவரும் விவாகஞ்செய்துகொண்டார்கள். பின்பு அவர்கள் நெடுநாளாக ஸம்சார வாழ்க்கையில் மிகுந்த சந்தோஷ சமாதானத்தோடு காலந்தள்ளினார்கள். ஆனால் போர்ச்சேவகத்திலிருக்கிறவனுக்கு நீடித்த சந்தோஷமும் அமைதலுமிராதாகையால், அநேக வருஷகாலஞ்சென்றபின்பு மெற்றில்டாவின் புருஷன் தலைவனாகயிருந்து நடத்தின சேனையானது யுத்தத்திற்குப் போயிருந்தபொழுது தோல்வியடைந்து எதிரிகளால் முறியடிக்கப்பட்டதினால் அவன் தன் சேனையுடன் ஓடி, தானும் தன் பெண்சாதி மெற்றில்டாவும் வாசம் பண்ணின நகரத்திற்குள் போய் ஒதுக்கிடந்தேடும்படி நேரிட்டது. ஆயினும் சத்துருக்கள் அவர்களைப் பின்தொடர்ந்து அந்நகரத்தை முற்றிக்கைப்போட்டார்கள். உள்ளேயிருந்த ராணுவவீரர் மெற்றில்டாவின் புருஷனுடைய அதிசய சாமார்த்தியத்தினால் தைரியமடைந்து, சத்துருக்கள் தங்களை ஜெயித்து நகரத்திற்குட் பிரவேசியாதபடி வெகுகாலம் தடைசெய்தார்கள்; ஆகிலும் அவர்கள் கடைசியில் பலக்ஷயப்பட்டுப்போக, சத்துருக்கள் அப்பட்டணத்தைப்

பிடித்துக்கொண்டார்கள். முன் சொன்னபிரகாரம் அக்காலத்தில் பிரான்ஸ் தேசத்தாரும், இங்கிலீஷ் தேசத்தாரும ஒருவருக்கொருவர் யுத்தத்திலேடுபட்டிருந்த குரூரசெய்கைகளுக்கு இணையானவற்றை எத்தேசத்து இதிகாசத்திலும் காண்பது அரிது. இங்கிலீஷ் தேசத் துரைசதருக்கள் மேற்சொல்லிய நகரத்தைப் பிடித்தவுடனே, அதிலிருந்த பிரான்ஸிய சிறைகளனைவரையும், விசேஷமாய் அப்பட்டணத்தின முற்றிக்கையை வெகுகாலம்வரை நீடிக்கச் செய்ததற்குக் காரணமாயிருந்த மெற்றில்டாவின் புருஷனையும சிரச்சேதம் செய்யவேண்டுமென்று, சத்துருக்களின் சேனைத்தலைவன் கொடூரமாய்த் தீர்ப்புச்செய்தான். உடனே இத்தீர்ப்பை யாதொரு தாமசமன்னியில் நிறைவேற்றிக்கொண்டுவந்தார்கள். கடைசியில் மெற்றில்டாவின் புருஷனை கொலைக்களத்திற்கு நடத்திக்கொண்டுபோய் நிறுத்தினார்கள். சிரச்சேதஞ்செய்யும் சேவகன் கத்தியை உருவிக்கொண்டு தயாராய் அருகில் நின்றான். இப்பரிதாபக் காட்சியைப் பார்க்கக் கூடிவந்த திரளான ஜனங்களின் இருதயம் உத்தமனாகிய மெற்றில்டாவின் புருஷனுக்காக மிகப் பரிதபித்துத் துடித்தன. தலையரி கத்தியை ஓங்கி வெட்டும்படி சேனாதிபதி சமிக்கையினால் கொடுக்கும் உத்தரவிற்குத்தான் யாவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இத்தருவாயில் சகிக்கமுடியாத துக்கசாகரத்தில் மூழ்கியிருந்த மெற்றில்டாவானவள் உயிருக்குயிராயிருந்த தன் நேசகணவனும, ஆதியில் போர்ச்சேவகரின் மூர்க்கத்தினின்று தன்னை ரக்ஷித்தவனும், மரணாக்கினையினால் சீக்கிரம் தன்னைவிட்டு பிரியப்போகிறவனுமாகிய உத்தம புருஷனிடத்தில் கடைசியாக விடைபெற்றுக்கொள்ளக் கருதி அவன் முன்வந்து நின்றாள். தனக்கு வந்த மகா பெரிய துன்பத்தை அவள் நினைத்து மிகவும் புலம்பி அழுது: "ஓ, தெய்வமே' நான் என் இளம்பிராயத்திலேயே மரணமடைந்தேனில்லையே, அக்காலத்தில் என் நேசபுத்திரன் என் கையினின்று தவறி வால்ற்றர்ஞ நதியில் விழ, அத்துன்பத்தை சகிக்கமாட்டாமல் நானும் ஆற்றில பாய்ந்தபோது பிள்ளையோடு நானும் தண்ணீரில் மாண்டுபோகாமல் தப்பிக் கரையேறிப் பிழைத்தது, இப்பரிதாபக் காட்சியைப் பார்க்கத்தானோ? ஓ, தெய்வமே' நான் இத்துன்பத்தை எப்படிச் சகிக்கப்போகிறேன்" என்று மனம் நொந்து புலம்பி அழுதாள். கல்நெஞ்சையும் மெழுகுபோல உருக்கத்தக்க மெற்றில்டாவின் இத்துயர வார்த்தைகளைக்

கேட்ட யாவரும் மனதுசகியாமல் மாலைமாலையாய்க் கண்ணீர் விட்டார்கள். சமீபத்தில் நின்ற பாலயப் பருவமுள்ள சேனாபதியானவன் மகா சௌந்தரியமும் சாந்தமுமுடைய மெத்தில்டா படுங் கஷ்டத்தைக் கண்டு பரிதபித்தாயன்னியில், முன் தனக்கு நேரிட்ட துன்பங்களையும், வாற்றர்ரூ நதியில் நடந்த சமாசாரங்களையும் அவள் ஒவ்வொன்றாக விவரித்துச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே அவன் மிகத் திடுக்கிட்டுச் சற்றுநேரம் திகைத்துநின்றான். உடனே தன் இருகண்களிலிருந்தும் தாரைதாரையாய்க் கண்ணீர்வடிய அவன் ஓடிவந்து, மெத்தில்டாவின் பாதங்களருகே விழுந்து: "என் அருமைத்தாயே! நான்தான் உன் புத்திரன், உன் கையிலிருந்து தவறி வாற்றர்ரூ நதியில் விழுந்த பிள்ளை நான்தான், தெய்வச் செயலினால் உடனே ஒருவன் என்னை ஆற்றினின்று தூக்கியெடுத்து வளர்த்துப் பரிபாலனஞ்செய்தான், கடைசியில இச்சேனைத் தலைமைக்கும் உயர்த்தப்பட்டேன்" என்று உடம்பு பதறி வாய்குழறிச் சொன்னான். பின்பு மாளிகைக்குள்ளாயிருந்த அவள் புருஷன் விடுதலையானான். அதுமுதல் அவர்கள் மூவரும் மிகுந்த அன்பு க்ஷேம சந்தோஷத்தோடு ஜீவித்துவந்தார்கள். இக்கதையினால் நாம் அறியவேண்டிய படிப்பினை யாதெனில்: நமக்குவரும் சந்தோஷம் நன்மை முதலியவை தெய்வகிருபையினால்தான் ஆகவேண்டும். அவருக்குமாத்திரம் சித்தமானால நாம முன் நினையாத, நாம் முன அறியக்கூடாத ஆயிரவழியாய் நமக்கு நன்மை வந்து சேர ஏதுவுண்டு.

தலைநோவு.

-இவ்வியாதி மிகவும் சாதாரணமானது; இதைப் பட்டனுபவியாதவர்கள் இருப்பது அரிது. இதில் பலவிதங்களுண்டு; அதின் காரணங்களும் அநேகம்.

க-வது. பித்தம் அதிகப்படுகிறதினால், அல்லது சாப்பிட்ட போஜனம் ஜீரணப்படாமலிருப்பதினால் தலைநோவுண்டாகும். இப்படியுண்டாகும் தலைநோவிற்குப் பித்தத் தலைநோவு, அல்லது அஜீரணத் தலைநோவு என்று பெயர். இதை நீக்குதற்கு வகை யாதெனில்: முதலாவது ஏதாவதொரு நல்ல வாந்திமருந்தைச் சாப்பி

டவேண்டும். அதின்பேரில் அவசியமானால் பேதிமருந்தொன்றை யும் உட்கொள்ளலாம். பின்பு வயிற்றைப் பெலப்படுத்தி ஜீரண சக்தியைக் கதிக்கச்செய்யும் அவிழ்தங்களைச் சாப்பிடவேண்டும்.

உ-வது. படிப்பு கவலை முதலிய மனோ முயற்சிகள் அதிகப்படு கிறதினிமித்தம மூளையானது அதிகமாய்க் கதிக்கப்பட்டு பின்பு இளைப்படைந்துபோம். இதினாலும் தலைநோவு உண்டாகிறதுண்டு. இதற்கு நரம்புத் தலைநோவு என்று பெயர். இதற்குப் பக்குவம் யாதெனில்: அதிகமான முயற்சிகளை நிறுத்திக் கொஞ்சக்காலத்தி ற்கு அமைதலாயிருக்கவேண்டும். மனதிற்கு இன்பத்தையும் உச் சாகத்தையும் உண்டாக்கத்தக்க பல காட்சிகளுள்ள வேறு இடங்க ளுக்குப் போய் மனதிற்கு இளைப்பாறுதலைத் தேடவேண்டும். மே லும நாள்தோறும் பிராதகாலம் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்பண் ணுவது மிகுந்த பிரயோஜனத்தை விளைவிக்கும். இப்படி ஸ்நானம் பண்ணுவதில் தண்ணீர் உயரததிலிருநது சிரசின்பேரில் விழும் படி செய்தால் அதிகப் பிரயோஜனமுண்டாகும். மிதமிஞ்சின மனோமுயற்சியினால் பலவீனமடைந்தவர்களுக்கு இவ்வித குளிர் ந்த ஜலஸ்நானம் மிகுந்த நன்மையை உண்டாக்கும்.

௩-வது. சிரசில் இரத்தம் அதிகப்படும்பொழுதும தலைநோவுண் டாகும். இதற்கு இரத்தக்கட்டுத் தலைநோவு என்று பெயர். இதை நீக்குவதற்கு வகை என்னவென்றால்: அட்டைகளினால் சிரசிலி ருந்து கொஞ்ச இரத்தத்தை வடிக்கலாம்; அல்லது பிடரியில் ஆக் கினி (Blister) பிலாஸ்திரி போட்டு கொப்புளமுண்டாக்கலாம்; அல்லவென்றால் சிரசிலுள்ள மயிரைச் சிரைத்துப் பின்பு மிக வும் குளிர்ந்த ஜலத்தை அல்லது கொறுக்கின (Ice) பனிக்கட் டியை சிரசின்பேரில் அடிக்கடி அப்பலாம். மேலும் பாதங்களில் அல்லது கால்களின் பின்பக்கங்களில் அல்லது தொடையின் உட்பக்கங்களில் காரமுள்ள கடுகுத் தூளையும், மிளகாய்த் தூளை யும் சேர்த்தது தண்ணீர்விட்டுப் பசைசெய்து பூசலாம. இப்பக் குவங்களினால் சிரசிலுள்ள இரத்தங்குறையும், அதினால் நோவு லகுப்படும். மேலும உயரத்திலிருந்து சிரசின்பேரில் குளிர்ந்த ஜலத்தைவிட்டு ஸ்நானம்பண்ணுகிறதும் இவ்விதத் தலைநோவிற் குப் பிரயோஜனத்தைத் கொடுக்கும்.

சமயோத்தரம்.

இத்தேசம் மகம்மதிய அரசாட்சிக்குள் அமைந்திருந்த காலத்தில் வங்காளநாட்டில் ஒரு நபாபு இருந்தான். அவனிடத்தில் வித்வசமர்த்தும் புத்தி விற்பன்னமுமுள்ள ஓர் மந்திரி இருந்தான். இவன் பேசுசில் சதுரன், கேளாதவரும் கேட்க அவாவும்படி பேசத்தக்க இங்கித வசனங்களையுடையவன். சமயம் அறிந்து உத்தரஞ் சொல்லுகிறதில் வெகு சமர்த்தன். இவனாலே அந்த நபாபுக்கு அதிக கனமும் பெரும் கீர்த்தியும் உண்டாயின. குடிகளும இன்புற்று வாழ்ந்தார்கள். அதனால் இம்மந்திரியினுடைய கியாதி பலதேசங்களிலும் பரவிற்று. ஒருநாள் டில்லி சக்கிரவர்த்தியின் சமுகத்தில் இவனைபபற்றிப் பிரஸ்தாபம் நடந்தபோது, இவனுடைய சொல்வன்மையைக்குறித்து ராஜசபையிலுள்ள அனைவரும வியந்து பேசினார்கள். சக்கிரவர்த்தியும அவனைப்பற்றிச் சந்தோஷப்பட்டார்.

இது சக்கிரவர்த்தியின் அருகிருந்த மகா கீர்த்திப்பிரதாபரான அவருடைய குருவுக்கு மனப்புழுக்கததை உண்டுபண்ணிற்று. உடனே அவர்: என்ன! நாம் இருக்கிறோமென்றும் பாராமல் இவர்கள் ஒரு அற்ப மந்திரியைக்குறித்து இவ்வளவு பிரபலமாய்ப் பேசுகிறதா! நல்லது, இவர்கள் கொண்டாடுகிற மந்திரியை நாம் எவ்விதத்திலும் பங்கப்படுத்தவேண்டுமென்று தன் மனதில் நிரணயித்து, அப்படியானால் நாமும் அம்மந்திரியைப் போய்ப் பார்த்துவர அபேக்ஷிக்கிறோமென்று சொல்லி சக்கிரவர்த்தியினிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். இவர் வருகிறார் என்ற செய்தி வங்காளத்து நபாபு அறிந்தவுடனே பட்டணமெல்லாம் அலங்கரிக்கச் சொல்லி, ரதகெஜதுரகபதாதிகளுடன் வெகு தூரம் எதிர்கொண்டுபோய் அவரை அழைத்துவந்து, மிகுந்த சிறப்புடன் பட்டணப் பிரவேசஞ்செய்வித்து, பின்பு கொலுமண்டபத்தில் உன்னதமான ஓர் ஆசனத்தின்மீது அவரை உட்காரவைத்து, குருவுக்குச் செய்யவேண்டிய உபசாராதிகளெல்லாம் செய்து, தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். மந்திரிகள் பிரதானிகள் பிரபுக்கள் மற்றுமுள்ளவர்களெல்லாம் சூழ இருந்தார்கள்.

அச்சமயத்தில் குருவானவர் நபாபினுடைய மந்திரியைப் பார்த்து: நாம உம்மைக்குறித்து வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒருவர் மனதிலுள்ளதை அவர் தம் வாயினுற் சொல்லாதிருக்கவும், அதைக் குறிப்பினுல் அறிந்து சொல்லுகிறதில் நீர் நல்ல சமர்த்தராமே; அது அமைச்சருக்குரிய லட்சணம்தான். நல்லது, இப்பொழுது நம்முடைய மனதில் உள்ளது என்ன சொல்லும்; பார்ப்போம் என்றார்.

அப்பொழுது மகா புத்திசாலியாகிய அம்மந்திரி ஆலோசித்து, ஏதோ இவர் நம்மை இந்தப் பெரிய சதசில் பங்கப்படுத்துமபடி மோசக்கருத்தாய் இப்படிப்பட்ட கேள்வி கேட்கிறார்; ஆகலால் இதற்குத் தகுந்த உத்தரஞ்சொல்லி, இவர் வாயை அடைக்கவேண்டுமென்று நிர்சயித்துக் குருவைப் பார்த்து: சுவாமி! எங்கள் அரசுஞகிய நபாபானவர் தங்களுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்து அத்தியந்த பக்திவினயத்துடன் தங்களுக்கு ஆசார உபசாரங்கள் செய்து தங்களிடத்தில் அன்புவைத்திருக்கிறதினுல், தாங்கள் அவர்பேரில் பரிபூரணகடாக்ஷம் வைத்து, அவருக்கு நீடிய ஆயுசும், புத்திரபௌத்திர சந்தானபாக்கியமும், நோயற்ற வாழ்வும், குறையற்ற செல்வமும் மென்மேலும் பெருகவேண்டுமென்று, அடியாருடைய விண்ணப்பத்தின்படி அருளுகின்ற ஆண்டவரை நோக்கித் தங்கள் உள்ளத்தில் இப்பொழுது பிரார்த்தனை செய்கின்றீர்கள் என்றான்.

இந்த மறுமொழியைக் கேட்டுக் குருவானவர் பிரமித்து, நாம் அப்படியல்லவென்று மறுத்தோமானுல் நபாபுக்கு நம்முடையமேல் வெறுப்புண்டாகும்; ஒத்துக்கொண்டோமானுல், அரசனுடைய பிரிதியும், எல்லாருடைய மதிப்பும் நமக்குக் கிடைக்கும். ஆதலால் இதை ஒத்துக்கொள்வதே புத்தியென்று தனக்குள் சிந்தித்து, மந்திரியைப் பார்த்து: நீர் மகா புத்திசாலி; நீர் சொன்னது சரிதான். நாம் அப்படியே பிரார்த்தித்தோம்; நல்லது, இப்பொழுது நாம் மறுபடியும் என்ன சிந்திக்கிறோம் சொல்லும் என்றார்.

அதற்கு அம்மந்திரி: அரசனுக்கு இரண்டாவது பிரஜைகள்தான் விசேஷமாதலால், அதைக்கொண்டு இவரை வெல்லவேண்டுமென்று யோசித்து, இப்பொழுது தங்கள் மனதில் இந்த ராஜ்

ஜியத்துக் குடிகளெல்லாம் நிர்விக்கினமாய் வாழ்ந்து சுகித்திருக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்ளுகிறீர்கள் என்றான்.

அப்பொழுது அந்தக் குருவானவர்: இந்த இரண்டாம் உத்தரத்தையும் மறுக்கமுடியாமல், ஆம அப்படித்தான் என்று அங்கிகரித்துக்கொண்டு, அரசனும் குடியும் ஆய்விட்டதே, இனி என்னசொல்லுவான் பார்ப்போம். இந்த வுந்திரியிலாவது இவனை அகப்படுத்திக்கொள்ளலாமென்று கருதி, இப்பொழுது மூன்றுமதரமாக நம்முடைய மனதில் எழும்புகிற விசேஷமென்ன சொல்லும் என்றார்.

அதற்கும் அம்மந்திரி அஞ்சாமல், தகுந்த ஆலோசனையுடன் குருவை நோக்கி: இப்பொழுது தங்கள் சிந்தையில் உண்டாகும் விசேஷம் என்னவென்றால், இந்த ராஜ்ஜியம் இவ்வளவு சீரும் சிறப்பும் செல்வமுமாயிருப்பதற்கும், இந்த நபாபுக்கு இவ்வளவு தனமும் கீர்த்தியுமுண்டாவதற்கும் காரணமென்ன என்று யோசிக்குமளவில், இந்த நபாபுடைய பத்தினி மகா உத்தமியும் பதிவிரதையுமாயிருக்கவேண்டும். அந்த அரசியுடைய கற்பே இந்தச் செல்வத்துக்கெல்லாம் காரணம்; ஆதலால் இந்த ராஜபத்தினியைப்போல பதிவிரதை வேறெங்கும கிடையாது என்று தங்களுடைய மனதில் நிர்ணயமுண்டாகிறது என்றான்.

இது கேட்டவுடனே அந்தக் குருவானவர் ஆச்சரியப்பட்டு, இனி நம்முடைய காரியம் இவனிடத்திற் செல்லாது; இவனை வெல்லவும் நம்மால். முடியாது. இவ்வளவு மரியாதையுடன் நாம் தப்புவதே யோக்கியதையென்று எண்ணி, மர்மம்விடாமல் மந்திரியை மெச்சிப் புகழ்ந்து, சிறிதுநாளிருந்து பின்பு டில்லிக்குத் திரும்பிப் போய்விட்டார்.

அந்தமன் தீவார்.

இத்தீவாருக்குள் இறந்துபோனவர்களைப்பற்றி நினைவுகூரவும், அவர்களுக்குப் பூஜிதை செய்யவும் என்று ஏற்பட்டிருக்கிற வழக்கம் விநோதமானது. அவர்களில் ஒருவன் இறந்துபோனால அப்பிரேதத்தைப் புதைத்துவிடுவார்கள். அப்புறம், புதைத்து இரண்

டொருவருஷம் சென்றபின்பு, அப்பிரேதக்குழியை மறுபடியும் தோண்டி, அதிலுள்ள எலும்புகளையெல்லாம் பொறுக்கி அவற்றைச் செத்துப்போனவனுக்குக் கிட்டின பந்துக்கள் யார்யாருண்டோ அவர்களெல்லாம் பாகித்துக்கொள்வார்களாம், இறந்துபோன அவனுக்குப் பெண்சாதி பிள்ளைகள் இருந்தால், அப்பொழுது அவன் மண்டையோடு அவன் பெண்சாதியின் பாகத்தையாவது, அவளில்லாவிட்டால் பிள்ளைகளில் ஒருவர் பாகத்தையாவது சேரவேண்டுமாம். அவர்கள் அந்த ஓட்டுக்குக் காவிவர்ணமேற்றி, அதைப் பின்னல் வேலையான ஒன்றற்குள் போட்டு, பின்பு அதை இடுப்பிலாவது கழுத்திலாவது ஒரு கயிற்றிற் கோத்துக் கட்டிக்கொண்டு திரிவார்களாம்.

சமாசார சங்கிரகம்.

ஒப்பற்ற சால்வை. — ராஜகுமாரனாகிய எடின்பரோ டியூக் பிரபு பஞ்சாப் நகரத்தைவிட்டுப் புறப்படுவதற்குமுன்னே, அவரிடத்திற்குக் காஸ்மீர தேசத்து மஹாராஜா மாட்சிமைதங்கிய நமது ராஜாத்தியவர்களுக்கென்று ஒப்பற்ற ஒரு சால்வை அனுப்பினார். அதற்கு நிகரான சால்வை முன் ஒருகாலுந்தும் நெய்யவில்லையாம். சால்வை நெசவில் சாமர்த்தியமுள்ள முப்பதுபேர் மூன்று வருஷம் இடைவிடாமல் அதில் வேலைசெய்தார்கள். அந்தச் சால்வை மகா நுணுக்கமான வேலைப்பாடானதினால், அதில் வேலைசெய்த அநேகருக்குக் கண்கூடக் கெட்டுப்போயிற்றும். அந்தச் சால்வைக்குச் சென்ற செலவு தொகை, பதினையாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து ரூபாய்.

உசிதமான கத்தியும், கேடகமும்.—லட்சுமணபுரியில் தாலூக்தார்களெல்லாஞ்சேர்ந்து பதினாயிரம் ரூபாய் விலையுள்ள மகா நேர்த்தியான ஒரு கத்தியும், கேடகமும் எடின்பரோ டியூக் பிரபுவுக்கு இனாம் பண்ணினார்கள். அவற்றின் கைப்பிடிகளில் மாணிக்கம், வயிரம், மரகதமுதலிய விலையுயர்ந்த ரத்நங்களெல்லாம் இழைத்திருந்தன.

ராஜபிரபுவின் வருகை. — *நாளது மார்ச்சுமீ 18உ சென்னபட்டணம் கவர்னராகிய மேன்மைதங்கிய (Lord Napier) நேப்பிய பிரபுவும், மற்றுள்ள பிரதானிகளும பேய்பூர்வரையும் எதிர்கொண்டுபோய் எடின்பரோ டியூக் பிரபுவை 21உ அல்லது 22உ சென்னபட்டணத்துக்குப புகைவண்டிமார்க்கமாய் அழைத்து வரப் போகிறார்கள். வழியில பகற்போசனஞ்செய்துவிட்டுப புறப்படும்படி ஈரோட்டில் பிரம்மாண்டமான கூடாரம் ஒன்று அடித்து விதானஞ்செய்யப்படுகிறது.*

இந்திய இருப்புப்பாதை.—*சென்னபட்டணத்துக்கும் பம்பாய்க்குமுள்ள தூரம் எழுநூற்று எண்பத்தெட்டு மைல். இவற்றுள் சென்னபட்டணத்திலிருந்தும் பம்பாயிலிருந்தும் ஆக அறுநூற்று எட்டுமைல் வேலை பூராவாய்த் தீர்ந்து புகைவண்டி செல்லுகிறது; மத்தியில் நூற்றெண்பது மைல்மாத்திரம் பாக்கி. இதிலும் வேலை வெகு துரிதமாய் நடந்துவருகிறது. இன்னும் நாலு தப்பினால் ஐந்துமாசத்துக்குள் நூற்றுமுப்பது மைல் வேலை முடிந்து வண்டி தாராளமாய்ச் செல்லும். பின்னும் சொற்பகாலத்தில் சென்னபட்டணமும் பாம்பாயும் இடையில் முறிவின்றி, இருப்புப் பாதையினால் ஒன்றாய் இணைந்து நாற்பது மணிநேரம் மிஞ்சினால் இரண்டுநாட் பிரயாணமாய்விடும். பம்பாய்க்கும் கல்கத்தா ராஜதானிக்கும் நடந்த இருப்புப்பாதை வேலை சமாப்திபெற்று, இப்பொழுதுதான் எடின்பரோ டியூக் வருகையில் அது பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாறு சென்னபட்டணம், பம்பாய், கல்கத்தா ஆகிய இம்மூன்று ராஜதானிகளும் இருப்புப் பாதையினால் இணைந்தது இத்தேசத்தின் வாழ்வுக்கும், வியாபாரம், நாகரிகம், கல்வி முதலிய விஷயங்களுக்கும் மிகவும அநுகூலமானது.*

நூதன குடிவரிச் சட்டம்.—*சென்னைத் துரைத்தனத்தைச்சேர்ந்த சட்ட நிரூபணசபையார் இப்பொழுது நூதன குடிவரிச சட்டமொன்றை ஏற்படுத்த ஆலோசிக்கிறார்கள். அது என்னவெனில்; ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள விவசாயத்தொழில் செய்யும் குடிகள் முதலிய சாதாரண ஜனங்களுக்குள் கல்வி அபிவிர்த்தியாகிவரும்பொருட்டு அங்கங்கே போதுமான பள்ளிக்*

கூடங்களை ஸ்தாபிக்கவும், முக்கியமான ஊர்களிலெல்லாம் (ஆஸ்பத்திரிகள்) வைத்தியசாலைகளை ஏற்படுத்தவும், அவற்றிலிருந்து வைத்தியமுறைகளைச் செய்வதற்காகச் சுதேசிகளானவர்கள் சுய பாஷைகளில் இங்கிலீஷ் வைத்தியசாஸ்திரங்களைக் கற்கத்தக்க வைத்திய பாடசாலைகளை நியமிக்கவும், பின்னும் ஜனங்களின் சவுக்கியம், வசதி, அபிவிர்த்தி முதலியவற்றிற்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்யவும் கருதி, இவ்வேற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான பணச்செலவுகளுக்காகக் குடிகளிடத்தில் தண்டும்படி நூதன வரியொன்றை ஏற்படுத்தவேண்டியது அவசியமென்று சட்ட நிரூபணசபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். நிலங்களையுடையவர்கள் தங்கள் நிலங்களுக்குத் தக்கபடியும், நிலங்களில்லாதவர்கள் தங்களுக்குள்ள வீடுகளின் தன்மைக்குத் தக்கபடியுமாக வருஷத்திற்கு இவ்வளவு வரி கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்போகிறார்கள். இப்படி அந்தந்த ஜில்லாவில் சேகரிக்கப்படும் பணம் அந்தந்த ஜில்லாவின் பிரயோஜனத்திற்கே செலவழிக்கப்படும். ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள பிரதானமான துரைத்தன உத்தியோகஸ்தர்களில் சிலரும் விசேஷமான குடிகளில் சிலரும் ஒரு ஆலோசனை சபையாகச் சேர்ந்து, தங்கள் ஜில்லாவிற்கு அவசியமான காரியங்களிவையெனத் தீர்மானித்து, அந்த ஜில்லாவின் வரும்படியைச் செலவழிப்பார்கள். இந்நூதன வரி குடிகளுக்குச் சற்று பாரமாயிருக்குமென்றாலும் அதினால் ஜனங்களுக்கு நன்மையும் விளையுமென்று நம்புகிறோம்.

M. A. பட்டம் பெற்றவர்கள்.—சென்ற பெப்ருவரிமீ 26உ கல்கத்தா சர்வகலாசாலையில் இருபத்துநாலுபேர் M. A. பட்டம் பெற்றனர் என்ற மங்கள சமாசாரம இத்தேசத்தின் கல்வி அபிவிர்த்தியை வாஞ்சிக்கிற யாவருக்கும் சந்தோஷம் அளிக்கத்தக்கது. சென்னைச் சர்வகலாசாலையில் நாளது வருஷம் M. A. பட்டம் பெறுகிறவர்களுடைய நாமங்கள் இன்னும் சொற்பதினத்தில் வெளியாகும்.